1987 மார்ச் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற முழு விவரத்தையும் தர வேண்டுமென்றால் கூடுமானவரையில் பதிலுரையின்போது விவரம் வருமேயானால் தரலாம். இல்லாவிட்டால் தனியாகத் தரலாம். இதற்கென்று தனி வெள்ளை அறிக்கை இப்போது வைக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்படாது.

(இ) உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

திரு. அ. பாலுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் மூலமாக, அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டைத் தொகுதியை மட்டும் வறட்சிப் பகுதியாக ஆக்கவில்லை என்ற அவசர முக்கிய தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் இன்றைக்கு ஐந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். பதில் வந்தால் இங்கே வந்து சேரும்.

3. கவன ஈர்ப்பு.

(அ) திருப்பரங்குன்றம் வெள்ளக்கல் பகுதியில் குடியமர்த்தப் பட்டவர்களுக்கு வசதிகள்.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பரங்குன்றம் தொகுதியில் அவனியாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட வெள்ளக்கல் என்னும் பகுதியில் உள்ள மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான புல் வளர்ப்பு பண்ணை பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு, குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் கூட நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 மார்ச் 27

அறிக்கை

மதுரை மாவட்டம், அவனியாபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட, மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான 385 எக்கர் கழிவு நீர் பண்ணையில், புல் வளர்ப்பு செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில், சுமார் 30 ஏக்கருக்கு மேலான வெள்ளக்கல் என்னுமிடத்தில், 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர்.

2. இவர்கள் கழிவு நீர் பண்ணையில் புல் வளர்த்து பராமரிப்பதற்காகவும், புல் விற்பனை செய்வதற்காகவும், மாநகராட்சியில் தற்காலிக அடிப்படையில் குடியமர்த்தப்பட்டவர்கள். அவர்கள் நிரந்தரமாக அப்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டு, அவ்விடத்தை விட்டு வெளியேறாமல் மாநகராட்சிக்கு இடையூறு செய்து வருகிறார்கள். மேலும் அப்பகுதியில் உள்ளவர்களில் சிலர், புல்லைக் களவாடிச்சென்று, மாடு வளர்க்க உபயோகப்படுத்துகின்றனர். இதனால், மாநகராட்சிக்கு பல லட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. அவர்களை சட்டப்படி வெளியேற்றவும், மதுரை மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது அவ்விடத்தில் 10 தெரு விளக்குகளும், ஒரு குடிநீர் கிணறும், ஒரு ஆழ்துளைக் கிணறும் உள்ளது. இச்சூழ்நிலையில் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள தண்ணீர் விநியோகம் மற்றும் இதர வசதிகள் தவிர, புதிதாக எவ்வித வசதியும் செய்வதில்லை யென்று மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

3. மேற்படி சூழ்நிலையில், அவனியாபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட வெள்ளக்கல் பகுதியில் வாழும் மக்களுக்கு, அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சுகாதார வசதி, வீட்டு மனைப் பட்டா வழங்குதல் முதலியவற்றை, அவனியாபுரம் பேரூராட்சியால் செய்வதற்கில்லை.

*திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்திலேயிருந்து வெளியேறுகின்ற சாக்கடை நீரைப் பயன்படுத்தி புல் வளர்ப்புப் பண்ணையை வளர்த்து வருகிறோம். ஆரம்பத்தில் யாருமே இந்த புல் வளர்ப்புப் பண்ணையில் பணியாற்றுவதற்கு முன் வரவில்லை. அந்த நோக்கில், மதுரை மாநகராட்சி சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் உசிலம்பட்டி தாலுகாவிலிருந்து, காளப்பன்பட்டி, தும்மக்குண்டு, குமாரன்பட்டி, சூரியப்பட்டி,

1987 மார்ச் 27] [திரு. மு. மாரிமுத்து]

போன்ற பகுதிகளிலிருந்து விவசாய மக்களைக் கூட்டி வந்து, அங்கே யாரும் முன் வராத அந்தப் பகுதிகளில்—வெள்ளக்கல் என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதிகளில், சாக்கடைத் தண்ணீரைப் பயன்படுத்தி புல் வளர்க்கின்ற தொழிலைச் செய்ய வைத்து, குடியமர்த்தி, இன்றுவரை மதுரை மாநகராட்சி அவர்களைப் பயன்படுத்தி வருகிறது. தற்போது அந்த புல் வளர்ப்புப் பண்ணை சீரோடும், செழுமையாகவும் வளர்ந்து, இன்று ஏறத்தாழ மதுரை மாநகராட்சிக்கு 5 இலட்சம் ரூபாய், ஆண்டொன்றுக்கு வருமானம் தரக்கூடிய நிலையில் இருக்கிறது. இப்படி செழுமையையும் செழிப்பையும் ஏற்படுத்தித் தந்த அந்த மக்கள்—வெள்ளக்கல் என்று சொல்கின்ற சுமார் 30 ஏக்கர் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். வெள்ளக்கல் என்பது மேட்டுப்பகுதி, இந்த புல் வளர்ப்புப் பண்ணை இருக்கின்ற இடம் பள்ளப் பகுதி. இந்த புல் வளர்ப்புப் பண்ணைக்கும், இந்த மேட்டுப் பகுதிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. என்றாலும் கூட, விவர அறிக்கையில் அந்த மக்களை அங்கேயிருந்து காலி பண்ணி ஆகவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி நம்மால், மதுரை மாநகராட்சியினால் அழைத்து வரப்பட்டு, குடியமர்த்தப்பட்டு இன்று அந்தப் பகுதிக்கு செழிப்பையும், வளத்தையும் தந்த அந்த மக்களை சாதாரணமாக, மாற்று ஏற்பாடின்றி வெளியேற்றுவது என்பது சரியாக இருக்காது. அக்கிரமமாக ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கக்கூடிய. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. மு. மாரிமுத்து: அக்கிரமமாக ஆக்கிரமிப்பு செய்கின்ற நபர்களைக்கூட தாயுள்ளம் கொண்ட நமது புரட்சித் தலைவருடைய அரசு வேறு இடத்தை ஒதுக்கி, அவர்களுக்கு வாழ வசதி செய்து தந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நம்மால் அழைத்து வரப்பட்ட அந்த மக்களை, நம்மால் குடியமர்த்தப் பட்ட அந்த மக்களுக்கு ஏதாவது வழிவகை செய்து, அவர்களுக்கும் ஒரு நிரந்தரமான குடியிருப்பை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை வாழ்வித்தால் நலம் என்று கருதுகிறேன். அதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் அழைத்து வரப்பட்டவர்கள் அல்ல. ஆக்கிரமிப்பாளர்கள் என்பது தான் தகவல். ஆக்கிரமிப்பாளர்கள் என்கிறபோது அகற்றப்பட வேண்டியவர்கள்.